10th March 1964]

கோயம்புத்தூர்	..	Special Agricultural Demonstrator	.. 4
		Demonstration Maistry	.. 12
கன்னியாகுமரி	..	Special Agricultural Demonstrator	.. 1
		Deonstration Maistry	.. 4

இந்த ஏற்பாட்டின்கீழ் கவனிக்கிறார்கள். அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட விவசாயிகள் அதிகாரிகளைக் கண்டு பழக ஊக்கம் அளித்தால் பலன் இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், கறிகாய்கள் உற்பத்தி செய்வதில், நிறைய செலவு ஆகிறது. ஒரு மூட்டை கறிகாயில் உள்ள சத்து ஒரு சிறிய மீனில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே கறிகாய்களை உண்ணுவதைவிட மீன் உண்ணும் பழக்கத்தை அமைச்சரவர்கள் பிரசாரத்தின் மூலம் விரிவு படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம். திரு. பூ. கக்கன் : முதலில் பிரசாரம் செய்வது கறிகாய்களுக்குத்தான். மீன்களுக்கு அல்ல.

கனம் சபாநாயகர் : போதிய அளவு மீன் இப்பொழுதே கிடைக்கவில்லை. பிரசாரம் தேவை இல்லை.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த போட்டி எல்லோருக்கும் சேர்ந்து நடந்ததா அல்லது சென்னை நகரத்திலுள்ள அமைச்சர் வீடுகளுக்கு மட்டும் நடந்ததா ?

கனம் சபாநாயகர் : போட்டிக்கு யார் சேர்ந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : சென்னை நகரத்திலுள்ள, கிச்சன் கார்டன் என்று சொல்லுகிறார்களே, அப்படிப்பட்ட எல்லா தோட்டங்களுக்கும் தான் இந்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

Prevention of hoarding of food-grains

* 210 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state the measures taken to prevent the hoarding of food-grains?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A statement[a] is placed on the Table of the House.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் "அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி விநியோக நிலை ஆகிய நிலவரங்கள் கவனமாகக் கண்காணிக்கப் பட்டு வருகின்றன. அவசியம் நேரும் போது அத்தியாவசியப் பண்டச் சட்டவிதிகளும், இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளும் பயன் படுத்தப் படும்" என்று போடப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது, எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் ?

கனம். திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

[10th March 1964

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இந்த அறிக்கையில் நீலகிரிக்கு 70 நியாய விலைக் கடைகள் என்று குறிப்பிடப் பட்டு இருக்கிறது. அதை அதிகரிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் இப்பொழுது நீலகிரி ஜில்லாவில் 70 ஃபேர் ப்ரைஸ் ஷாப்புகள் இருக்கின்றன. அவசியம் ஏற்பட்டு, கலெக்டர் அதிகம் வேண்டுமென்றால், அது பற்றி முயற்சி எடுக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சபாநாயகர் அவர்களே, நியாய விலைக்கடைகளில் ஒரு லிட்டருக்கு 39 ந.பை. என்று விற்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் கோவையிலே சென்ட்ரல் கோடவுன் இருக்கிறது. அங்கே 39 ந.பை. க்கு வாங்கி நீலகிரியில் உள்ள கிராமப்புறங்களிலும் அதே விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ட்ரான்ஸ்போர்டு சார்ஜையும் சேர்த்து 41 அல்லது 42 ந.பை.-க்கு விற்க அனுமதி கொடுக்கப்படுமா? இல்லாவிட்டால் ஒரு சென்ட்ரல் கோடவுனை நீலகிரியிலேயே வைத்து அரிசி ஸ்டாக் செய்தால், சௌகரியமாக இருக்கும். அப்படிச் செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம். திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அங்கத்தினர் சொல்லுகின்ற விஷயத்தை பரிசீலனை செய்த பிறகு தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அறிக்கையில் திருச்சிக்கு 10 நியாயவிலைக்கடைகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பொதுவாக அது, சர்ப்ளஸ் ஏரியா என்று சொல்லப்பட்டாலும், உண்மையிலேயே அங்கே அரிசி பற்றாக்குறை இருப்பதால் பொதுவாக எல்லா மேஜர் பஞ்சாயத்துக்களிலும், நியாய விலைக் கடைகளைத் திறக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அவசியம் என்று தகவல் வந்தால் அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, சேலம் நகரைப் பொறுத்தவரை, சேலம் ஜில்லாவிலே 25 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதை அதிகரிக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அவசியம் என்று கலெக்டர் ரிபோர்ட் செய்தால் முயற்சி எடுக்கப்படும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the members.]

II. GOVERNMENT BILL

The Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964.

The Hon. Sri V. RAMAIAH : Sir, I beg leave to introduce the Tiruchirappalli Kaieruvram and Mattuvaram (Extension of Application) Bill, 1964.